Alangayam-Polur Road

*2 Q.—SRI A. GOVINDASAMY: (on behalf of Sri S. M. ANNAMALAI): கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

போளூர் தாலுகா ஜவ்வாது மலையிலுள்ள ஆலங்காயத்திலிருந்து போளூர் செல்லும் ரோடை தார் ரோடாக மாற்றும் உத்தேசம் உண்டா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: No Sir, there is no proposal to provide blacktopping for the road from Alangayam to Polur in North Arcot district.

Diploma in Commerce.

*3. Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) "டிப்ளமா இன் காமர்ஸ்" (Diploma in Commerce) பரீட்சையை சென்னை சர்க்கார் வருடத்தில் எத்தனை முறை நடத்துகிறார்கள்?

(ஆ) 1957 முதல் 1959 வரை எவ்வளவு பேர்கள் பங்கெடுத்தார்கள்?

(இ) அதில் எவ்வளவு பேர்கள் பாஸ் செய்தார்கள்?

(ஈ) பாஸ் செய்தவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறதா?

(உ) இல்லை என்றால் ஏன்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The diploma course in Commerce has been started only in 1958 in some of the institutions in this State and the first batch of students will be appearing for the final year examination only in April, 1961. Two examinations will be held every year, one in April and a supplementary one in September.

(*b*) to (*e*) Do not arise.

SRI V. K. KOTHANDARAMAN: நமது ராஜ்ய சர்க்காரின் மூலமாக வைக்கப்பட்டுள்ள டிப்ளமா இன் காமர்ஸ் பாஸ் செய்யக் கூடியவர்களுக்கு வேலை கொடுக்காமல் இந்தியன் மர்ச்செண்ட்ஸ் சேம்பர் என்கிற ஒரு ஸ்தாபனத்தின் பெயரால் வைக்கப்பட்டுள்ளவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டிலும் வேலை கொடுக்கப்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? ஆகவே இனிமேல் நமது சர்க்கார் வைக்கும் டிப்ளமா இன் காமர்ஸ் என்ற பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடியவர்களுக்கு வேலை கொடுக்கும்படி செய்யப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: தற்போதுதான் நான் பதில் சொன்னேன். சர்க்காரால் அமைக்கப்பட்ட ஸ்தாபனம் இன்னும் பரீட்சை வைக்கவில்லை என்றும் அப்படி பரீட்சை எழுதி பாஸ் பண்ணி ஒருவரும் இன்னும் வெளிவரவில்லை என்றும் சொன்னேன். அப்படி பாஸ் செய்து விட்டு வந்தால்தான் அவர்களுக்கு வேலை கிடைக்கும்.